***கவனிக்க.-*** *2023.03.31 ஆந் திகதிய 2326 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2327 - 2023 අප්‍රේල් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.06

*2327 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 538 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 545 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

537-B 82441-5,441 (2023/04)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்தகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவாளர் பதவி – முல்லைத்தீவு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மே மாதம் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | பணங்காமம் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாந்தை கிழக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு. |

*04-75*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மே மாதம் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை வடக்கு | கோட்டமுனை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு. |
| மட்டக்களப்பு | காத்தான்குடி | காத்தான்குடி தெற்கு பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு. |
| மட்டக்களப்பு | மண்முனை வடக்கு | பூநொச்சிமுனை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு. |

04-76

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மே மாதம் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மாந்தை மேற்கு | மாந்தை மேற்கு பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார். |

04-77

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி – திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மே மாதம் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 17.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் வடக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மூதூர் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை. |

*04-78*

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

சட்ட வரைஞர் திணைக்களம்

**சட்ட வரைஞர் திணைக்களத்தின் உதவிச் சட்டவரைஞர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2023**

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி சட்டவரைஞர் திணைக்களத்தின் உதவிச் சட்டவரைஞர் பதவிகளிலான 04 வெற்றிடங்களையும் (ஆங்கிலம்/தமிழ்) மற்றும் உதவிச் சட்டவரைஞர் பதவிகளிலான 02 வெற்றிடங்களையும் (ஆங்கிலம்/சிங்களம்) நிரப்புவதற்குத் தகைமை பெற்ற ஆளணியினரைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காகத் தகவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் 2023, யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும். பகிரங்க சேவை ஆணைக்குழு இப்பரீட்சையைப் பிற்போடலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(அ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுவதற்கான முடிவுத் திகதி 2023, மே 08 ஆகும்.

**குறிப்பு.**- விண்ணப்பமொன்று அல்லது தொடர்புபட்ட ஆவணம் தொலைந்துபோனமை அல்லது அஞ்சலில் தாமதமானவை தொடர்பான ஏதேனும் முறைப்பாடு கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

01. **தொழில் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.**-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். நீர் உரித்துடையவராகவுள்ள ஓய்வூதியத் திட்டத்தின் மீது அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஒரு கொள்கை முடிபுக்கு நீர் அமைந்தவராக இருத்தல் வேண்டும். நீர் விதவைகள் மற்றும் அநாதைகள்/ விதுரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அதற்கான உதவுதொகைகளை நீர் செலுத்துதல் வேண்டும்.

(ii) 2020.10.16 ஆந் திகதிய 18/ 2020 ஆம் இலக்க, பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி, மற்றைய அரசக கரும மொழியிலான/அரச கரும மொழிகளிலான தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(iii) இந்நியமனம், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைசார் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் உதவிச் சட்டவரைதற் சேவைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை அத்துடன் அதற்குச் செய்யப்பட்டுள்ள மற்றும் செய்யப்படும் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றுக்கு அமைந்ததாக உள்ளது.

(iv) ஆட்சேர்ப்புக்காக நீர் தகவுடையவராகவுள்ள மொழிமூலமானது, விண்ணப்பப் படிவத்தில் உம்மால் குறிப்பிடப்பட்ட மொழிமூலமாகவிருக்கும்.

02. **சம்பள அளவுத்திட்டம்**: பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கான செயலாளரினால் 2018.02.21 ஆந்திகதிய EST 5/4/24(XIX)-9 ஆம் இலக்கக் கடிதத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சம்பளக் கட்டமைப்பின்படி, இப்பதவிக்கான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 75,000 - 10 x 1630 - ரூபா 91,300 ஆகும் என்பதுடன் சம்பளக் குறியீடு LDSI – 2016 என்பதாகும்.

03. தகைமைகள்:

3.1 **கல்விசார் /உயர்தொழில்சார் தகைமைகள்:**

i. இலங்கை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராகச் சத்தியஞ்செய்திருத்தல் வேண்டும்.

ii. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில், சிங்களம் அல்லது தமிழ் மொழியில் மற்றும் ஆங்கில மொழியில் விசேட சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3.2 **அனுபவம் உயர் நீதிமன்றத்தின்:** சட்டத்தரணியாகச் சத்தியஞ் செய்தபின்னர் ஓராண்டுக்குக் குறையாத முனைப்பான உயர்தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (முனைப்பான உயர்தொழில்சார் அனுபவத்துக்கான எண்பிப்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், அனுபவக் காலப்பகுதியையும், சான்றுப்படுத்துநரினால் இடப்பட்ட திகதியையும், முத்திரையையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் நேர்முகப்பரீட்சையில் முன்வைக்கப்படுதலும் வேண்டும்.)

3.3 **உடற்றகைமைகள்:** ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல்ரீதியிலும் உளரீதியிலும் தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும்.

3.4 ஏனைய தகைமைகள்:

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையொருவராகவிருத்தல் வேண்டும்;

ii. விண்ணப்பதாரர் மிகச்சிறந்த பண்புக்கூறைக் கொண்டிருத்தல் வேண்டும்;

iii. விண்ணப்பதாரர் விண்ணப்பங்களைக் பெறுவதற்கான முடிவுத் திகதியாகவுள்ள 2023, மே 08 ஆந் திகதியில், பதவிக்கு நியமிக்கப்படுவதற்காகத் தேவைப்பட்ட எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்;

iv. விண்ணப்பதாரர் இலங்கைச் சட்டங்களின்கீழ் ஏதேனும் குற்றவியல் சார்த்துகைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டிருத்தலாகாது.

04. **வயதெல்லை:** விண்ணப்பங்கள் பெறப்பட்ட கடைசித் திகதியன்றுள்ளவாறு வயதானது 22 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை:** ஓர் எழுத்துப் பரீட்சை மற்றும் தகவுடைமையை மதிப்பீடு செய்கின்ற ஒரு நேர்முகப்பரீட்சை மீதான பெறுபேறுகளின்மீது ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படும். ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பதவிகளிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஐந்து மடங்குகளைக் கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானோர், பரீட்சையின் கூட்டுமொத்தப் புள்ளிகளின் திறன்களின் தொடர்வரிசையின்படி, தகவுடைமையை மதிப்பீடுசெய்கின்ற ஒரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் 07 ஆம் இலக்கத்தின்கீழ் முன்வைக்கப்பட்டதுமான புள்ளியிடுதல் நடவடிக்கைமுறைக்கிணங்க பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் தகவுடைமையை மதிப்பீடு செய்கின்றதான ஒரு நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும். தகைமைபெற்ற விண்ணபதாரர்கள், கிடைக்கக்கூடியனவான வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க எழுத்துப் பரீட்சை மற்றும் தகவுடைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் கூட்டுமொத்தப் புள்ளிகளின் திறன்களின் தொடர்வரிசையினது அடிப்படையில் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். நியமிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் நியமனத்தின் பயனுறும் திகதியும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

06. **பரீட்சை நடவடிக்கைமுறை.**- பின்வரும் பாடங்களைக்கொண்டுள்ள இரண்டு (02) வினாத்தாள்களைக்கொண்ட எழுத்துப்பரீட்சையொன்று நடாத்தப்படும். பாடங்களும் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்குத் தேவைப்பட்ட குறைந்தபட்சப் புள்ளிகளும் பின்வருமாறாகும். பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலத்தில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஏதேனுமொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சார்த்தியொருவர், அவரின் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட பரீட்சைக்கான மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் | சித்திக்குத் தேவைப்பட்ட குறைந்தபட்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 01. சட்டம் பற்றிய அறிவு (02 மணித்தியாலங்கள்) | i. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புப் பற்றிய அறிவு<br>ii. பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுட்பட நியதிச் சட்ட பொருள்கோடல் பற்றிய சட்டக் கோட்பாடுகள்<br>iii. பொதுவான சட்டக் கோட்பாடுகள் | 40% |

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் | சித்திக்குத் தேவைப்பட்ட குறைந்தபட்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 02. மொழித்தேர்ச்சி (01 மணித்தியாலம்) | ஆங்கில மொழியிலுள்ள பாராளுமன்றச் சட்டமொன்றின் ஒரு பகுதியை சிங்கள/தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல். | |
| i. மொழி பெயர்ப்பு | ஆங்கில மொழியிலுள்ள சட்டமொன்றின் பிரிவை அதன் பிழையான சிங்களம்/ தமிழ் மொழிபெயர்ப்புகளுடன் ஒப்பிடுதலும் மற்றும் சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்பைச் செம்மையான முறையில் மீளாய்வு செய்தலும்; அத்துடன் | 40% |
| ii. இலக்கணம் | பரீட்சார்த்திகள், சிங்கள/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் இலக்கணம் பற்றிய அறிவைப் பரீட்சிக்கின்ற இரண்டு இயைபான மொழிகளிலான (ஆங்கிலம் மற்றும் சிங்களம் அல்லது ஆங்கிலம் மற்றும் தமிழ்) ஒரு வினாத்தாளுக்கு விடையளித்தல் வேண்டும். | |

07. **தகவுடைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை.**- பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள கூட்டுமொத்தப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதில் திறன்களின் தொடர்வரிசையின்படி தகவுடைமையை மதிப்பீடுசெய்வதற்காக வெற்றிடங்களின் எண்ணிக்கையில் ஐந்து மடங்குகளைக்கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

தகவுடைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை, பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும்.

தகவுடைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப்பரீட்சையின் நேர்முகப் பரீட்சைச் சபையின் புள்ளியிடும் திட்டம்

| சுட்டிலக்கம் | பாடம் | | அதிகபட்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட சட்டத்திலான பட்டப்பின் பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட சட்டத்திலான பட்டப்பின் திப்புளோமா அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியின் உயர் சட்டக்கற்கைகள் நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட அற்றோணியிலான பட்டப்பின் திப்புளோமா | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட சட்டமாணிப் பட்டம் | | |
| | - முதலாம் வகுப்புடன் | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு மேல்நிலையுடன் | 10 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ்நிலையுடன் | 07 | |
| | - பொது | 05 | |
| | (ஈ) சட்டக்கல்லூரியில் இறுதியாண்டில் முதலாம் வகுப்புக்காக | 10 | |
| | (உ) சட்டக்கல்லூரியில் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்புக்காக | | |
| | குறிப்பு : அதியுச்சத் தகைமைகளுக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும் | | |
| 02. | **மொழித் தேர்ச்சி** | | 10 |
| | 01. ஆங்கில மொழித்தேர்ச்சி | | |

| சுட்டிலக்கம் | பாடம் | | அதிகபட்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பிரதான பாடமொன்றாகவுள்ள ஆங்கில மொழியுடனான பட்டமொன்று | 05 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட ஆங்கிலத்திலான திப்புளோமா அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட SLQF மட்டம் 3/ NVQ மட்டம் 5 அல்லது அதற்குமேல் ஆங்கிலத்திலான திப்புளோமா அல்லது ஆகக்குறைந்தது (உள்நாட்டு அல்லது லண்டன்) க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஆங்கிலத்துக்கான மிகச்சிறந்த சித்தியேனும், அல்லது IELTS (கல்விசார்) இல் 6.5 அல்லது அதற்கு மேலான ஒட்டுமொத்தமான கூட்டுமொத்தப் புள்ளிகள், TOEFL-IBT இல் 79 அல்லது அதற்கு மேலான புள்ளிகள், TOEFL-CBT இல் 213 அல்லது அதற்கு மேலான புள்ளிகள் அல்லது TOEFL-PBT இல் 550 அல்லது அதற்கு மேலான புள்ளிகள் | 04 | |
| | 02. சிங்கள/தமிழ்மொழித் தேர்ச்சி<br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பிரதான பாடமொன்றாக சிங்கள/ தமிழுடனான பட்டம் | 05 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது ஓர் அரசாங்கப் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சிங்கள/தமிழ்மொழியிலான திப்புளோ மாவுக்கு (01 ஆண்டுக்குக் குறையாமல்) | 04 | |
| | குறிப்பு : ஓர் உபதலைப்பின்கீழ் அதியுச்சத் தகைமைக்காக மட்டுமே புள்ளிகள் அளிக்கப்படும். | | |
| 03. | **மேலதிக அனுபவம் :**<br>பதவிக்காக விண்ணப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட, சட்டத்தரணியொருவராக 01 ஆண்டுச் சேவை நீங்கலாக, பகிரங்க அல்லது தனியார் துறையில் சட்டத்தரணியொருவராக/ சட்டப்பதவியை வகிக்கின்றமைக்காக அனுபவத்தின் ஒவ்வோராண்டுக்கும் 02 புள்ளிகளாக அதிகபட்சம் 10 புள்ளிகள்.<br>குறிப்பு I : தனியார் துறையில் சட்டத்தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள், ஆகக்குறைந்தது இருபது ஆண்டுகளுக்குக் குறையாத சேவையைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணியொருவரினால் அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரினால் அல்லது நீதிச்சேவை அலுவலரொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழொன்றின்மூலம் அவர்களின் மேலதிகத் தகைமையை நிலைநாட்டுதல் வேண்டும். பகிரங்க அல்லது தனியார்துறையில் சட்டப் பதவியை வகிக்கின்ற விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய திணைக்கள/ நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சேவைச் சான்றிதழொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>குறிப்பு II : சேவையின் தொடக்க மற்றும் முடிவுத் திகதிகளைக் குறித்துரைக்காத சேவைச் சான்றிதழ்கள், புள்ளிகளை அளிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. | | 10 |
| 04. | **தகவுடைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப்பரீட்சையில் வெளிக்காட்டப்பட்ட திறன்கள்** | | **05** |
| | **மொத்தம்** | | **50** |

08. **விண்ணப்பிக்கும் முறை**.-

8.1 விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இவ்வறிவித்தலின் முடிவில் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திறகிணங்க, அவர் பரீட்சைக்குத் தோற்றும் அதேமொழியில் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் ஒவ்வொரு பிரிவும் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பதாரரினால் நிரப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் எவையேனும் பிரிவுகள் அவருக்கு ஏற்புடையனவல்லாவிடின், "ஏற்புடையனவல்ல" என அவை அடையாளமிடப்படுதலும் வேண்டும். வரிசைகள் வெற்றாகவிடப்படின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாமென்பதைக் கவனிக்கவும். விண்ணப்பமானது, 21x29.7 செ.மீ. அளவினதான A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(அ) 01 முதல் 06 வரையிலான இலக்கங்களைக் கொண்ட தலைப்புக்கள் முதலாவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) 07 முதல் 12 வரையிலான இலக்கங்களைக் கொண்ட தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்;

(இ) 13 முதல் 14 வரையிலான இலக்கங்களைக் கொண்ட தலைப்புக்கள் மூன்றாவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் ஏனைய இலக்கங்களைக் கொண்ட தலைப்புக்கள் நான்காவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகவும் இருக்கும்.

8.2 விண்ணப்பம் இப்பரீட்சை பற்றிய அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்துக்கிணங்க உள்ளதாவென்பதை விண்ணப்பதாரர் செவ்வைபார்த்தல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பத்துக்கிணங்காத அல்லது முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கவும்படும்.

**விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்**

8.3 முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பம் 2023, மே 08 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். "சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்டவரைஞர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என்பது கடிதவுறையின் மேல் இடதுபக்க மூலையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். மேலும், சிங்களம்/ தமிழ் மொழியிலான விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர், சிங்களம்/ தமிழ்மொழியுடன் மேலதிகமாக ஆங்கிலமொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

8.4 தற்போது பகிரங்க சேவையில் அல்லது மாகாணப் பகிரங்க சேவையில் சேவையாற்றுகின்ற அலுவலர்கள், தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட்டமை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கவும்படும்.

**பரீட்சைக் கட்டணம்**

8.5 பரீட்சைக் கட்டணம் 1,200.00 ரூபாவாகும். பரீட்சார்த்தியானவர், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் 20-03-02-13 ஆம் இலக்க அரசிறைத் தலைப்பின்கீழ் அரசாங்க வருமானத்துக்கு வரவு வைக்கப்படுவதற்கு மீளளிக்கப்படத்தக்கதல்லாத பரீட்சைக் கட்டணமொன்றை தீவிலுள்ள ஏதேனும் அஞ்சல் அலுவலகத்திற்கு அல்லது உப அஞ்சல் அலுவலகத்திற்கு அல்லது ஏதேனும் பிரதேச செயலகத்துக்கு அல்லது மாவட்டச் செயலகத்துக்குச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு கழறாதவாறு விண்ணப்பத்தில் குறித்த இடத்தில் அதன் ஓரங்களின் ஒன்றில் ஒட்டப்படுதலும் வேண்டும். சொல்லப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகவிருக்கும். பணக்கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ பரீட்சைக் கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.6 எச்சூழ்நிலையின் கீழும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

09. **அனுமதிகள்**.-

9.1 பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுவதற்கான முடிவுத் திகதியன்று அல்லது அதன் முன்னர் இயைபான பரீட்சைக் கட்டணத்தின் கொடுப்பனவின் மீது, கிடைக்கப்பெற்ற பற்றுச்சீட்டுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகளை அனுப்புவார். அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன், பரீட்சைகள் திணைக்களம் அது தொடர்பாகச் செய்தித்தாள்களில் அறிவித்தலொன்றை வெளியிடும்.

9.2 அத்தகைய அறிவித்தல் வெளியீட்டிலிருந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டையொன்று கிடைக்காத எவரேனும் பரீட்சார்த்தி இருப்பாராயின், அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட முறையில் பரீட்சார்த்தியின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்துடனும் பரீட்சையின் பெயருடனும் சேர்த்து அத்தகைய நிகழ்வுபற்றி பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியேயுள்ளவொரு பிரதேசத்திலிருப்பவராயின், அனுமதி அட்டையின் பிரதியொன்று அனுப்பப்படக்கூடிய தொலைநகல் இலக்கத்தைக் கொண்டிருக்கவேண்டிய கோரிக்கைக் கடிதத்துடன் சேர்த்து, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொலைநகல் இலக்கத்துடன் தொடர்புகொண்டு விசாரணைகளைச் செய்தல் பயனுள்ளதாகவிருக்கும். பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவலை எண்பிக்கும் நோக்கில், உரியமுறையில் நிரப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கு எண்பிப்பான பற்றுச்சீட்டின் பிரதியையும், பதிவஞ்சல் மூலம் விண்ணபத்தை அனுப்பும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் உம்மிடம் வைத்திருத்தல் மிகவும் பயனுள்ளதாகவிருக்கும்.

9.3 ஒரு பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டையொன்றை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகவுடைமைக்கான ஓர் ஒப்புக்கொள்ளுதலாகக் கருதப்படுதலாகாது.

**பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்கான அத்தாட்சிப்படுத்துகையைப் பெற்றுக்கொள்ளுதல்**

9.4 ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அவரது அல்லது அவளது கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகையைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானது. ஒரு நிறுவனத்தினூடாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரரொருவர் அவர் தற்போது சேவையாற்றுகின்ற நிறுவனத்தின் தலைவரின்மூலம் அவரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஓர் அரசாங்கப் பாடசாலையின் அதிபர் / ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், ஒரு சத்திய ஆணையாளர், ஒரு சட்டத்தரணி, ஒரு பிரசித்த நொத்தாரிசு, மூன்று ஆயுதந்தாங்கிய படைகளினதும் ஓர் ஆணைபெற்ற அலுவலர் அல்லது பகிரங்க சேவையிலுள்ள அல்லது உள்ளூராட்சி சேவையிலுள்ள அலுவலர் அல்லது ஒரு நிரந்தரமான பதவிநிலை அலுவலர் அல்லது ஒரு பௌத்த கோயிலின் பிரதான மதகுரு அல்லது அதற்குப் பொறுப்பான மதகுரு அல்லது மதகுருவாக முக்கிய பதவி வகிக்கின்ற வேறேதேனும் மதத்துக்குச் சொந்தமான வழிபாட்டிடத்திற்கு பொறுப்பாகவுள்ள ஆளொருவர் என்போர்மூலம் தமது கையொப்பங்களை அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும்.

**பரீட்சைக்கு அனுமதித்தல்**.-

9.5 பரீட்சார்த்தி, இயைபான பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சையின் முதலாவது நாளன்று, பரீட்சார்த்தி, அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதியைப் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அளித்தல் வேண்டும். இதற்கமைந்தொழுகாத பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

9.6 பரீட்சார்த்திகள், பரீட்சையை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தோராவர். அவர் சொல்லப்பட்ட சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் மீறப்படின், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஒரு தண்டனைக்கு உட்படுத்தப்படலாம்.

பரீட்சார்த்தியின் தகவலுக்காக:

(அ) ஏதேனும் ஆவணம் அல்லது அதன் ஏதேனும் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதலாகாது.
(ஆ) நேர்காணலில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்துட்கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**:

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்திப்படும்வகையில் எண்பித்தில் நிலைநாட்டுதல் வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஒன்று அந்நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்தி அவரது அல்லது அவளது முகம் மற்றும் காதுகளை அடையாளங் காண்பதற்காக மூடாமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவரது அல்லது அவளது அடையாளத்தை எண்பிப்பதற்கு மறுக்கின்றவரான எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்துக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படலாகாது. மேலும் பரீட்சார்த்திகள் பரிட்சை உத்தியோகத்தர்களினால் விண்ணப்பதாரர்கள் அடையாளங் காண்பதற்காக பரீட்சை மண்டபத்தில் நுழைந்த நேரத்திலிருந்து மண்டபத்தை விட்டுச் செல்லும் வரை அவரது அல்லது அவளது முகத்தை மற்றும் காதுகளை மறைத்தலாகாது.

**11. பொய்யான தகவலைக் கொடுத்துதவுதல்:**

11.1 பரீட்சார்த்திக்கு தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சை நடாத்தப்படுகின்றபோதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்நேரத்திலேனும் வெளிப்படின், அவரது பரீட்சார்த்த நிலை இல்லாதாக்கப்படும்.

11.2 எவரேனும் பரீட்சார்த்தியொருவர், தெரிந்துகொண்டு பொய்யான தகவலை அளித்துள்ளமை அல்லது அவர் வேண்டுமென்று ஏதேனும் முக்கியமான தகவலை மறைத்திருந்தமை வெளிப்படின், அவர் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. இவ்வறிவித்தலில் வழங்கப்படாத ஏதேனும் கருமம் தொடர்பாக முடிவுகளைச் எடுப்பதற்கான உரிமையைப் பகிரங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

13. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

14. இங்கு குறிப்பிடப்பட்ட சில அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதுவிடுவதற்கான உரிமையைப் பகிரங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறு,

வசந்த பெரேரா
செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்புச் சீர்திருத்த அமைச்சு.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்புச்
சீர்திருத்த அமைச்சு,
அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.
2023, ஏப்பிறல் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்டவரைஞர் பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை- 2023**

01. விண்ணப்பிக்கும் பதவி : ☐
உதவிச் சட்டவரைஞர் (ஆங்கிலம்/சிங்களம்) - 1
உதவிச் சட்டவரைஞர் (ஆங்கிலம்/தமிழ்) - 2
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

02. பரீட்சார்த்தி எந்த மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்: ☐
சிங்களம் - 2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

03. முடிவில் முதலெழுத்துக்களுடன் பெயர்:

I. ஆங்கிலப் கெப்பிற்றல் எழுத்துக்களில்: ........................................................................................
(உ.ம்: KUNAWARDHANA, M.G.B.S.K.)

II. சிங்களத்தில்/தமிழில்:........................................................................................................

04. முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்ட பெயர்:

I. ஆங்கிலப் கெப்பிற்றல் எழுத்துக்களில்: ........................................................................................

II. சிங்களத்தில்/தமிழில் : ........................................................................................................

05. அனுமதி அட்டை/தகவுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சைக் கடிதம் அனுப்பப்படவேண்டிய முகவரி:

I. ஆங்கிலப் கெப்பிற்றல் எழுத்துக்களில்: ..........................................................................................

II. சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................

06. I. நிரந்தர முகவரி:............................................................................................................
..........................................................................................................................

II. மாவட்டம் :.............................................................................................................

07. பால்: ☐
ஆண் - 0
பெண் - 1
(இயைபான இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

08. செல்லிடத் தொலைபேசி இல. :.........................................

09. தேசிய ஆளடையாள அட்டை இல: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

10. இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும்: ☐
ஆம் - 1
இல்லை - 2
(இயைபான இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

11. பிறந்த திகதி:
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

12. 2023 ஆண்டு மே 08 உள்ளவாறான வயது :
வருடங்கள் :.................................... மாதங்கள் :.............................. நாட்கள் :............................

13. I. உயர்தொழில்சார் மற்றும் வேறு தகைமைகள்: ........................................ ..........................................
.............................................................................................................................................

II. இரண்டாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்சத் தகைமை :.........................................................

III. முதலாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்சத் தகைமை:..............................(க.பொ.த. உயர் தரத்தின் / சாதாரண தரத்தின்) பரீட்சையாண்டுகளும் பெறப்பட்ட தரங்களும் (திறமைச் சித்தி / விசேட சித்தி) குறிப்பிடப்படுதல் வேண்டும்).

IV. (அ) பட்டத் தகைமைகள்:

| பட்டம் | பாடங்கள் | தரம் | ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

(ஆ) பட்டப்பின் தகைமைகள்:

| பட்டப்பின் பட்டம் | பட்டம் வழங்கப்பட்ட ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

V. சட்டத்தரணி என்ற உயர்தொழிலில் பெற்ற அனுபவம்:.....................................................................
(சேவைக் கடிதமொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.)

14. I. ஏதேனும் தவறுக்காக நீர் சட்ட நீதிமன்றமொன்றில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?
ஆம்/இல்லை.
ஆம் எனில், விளக்கவும்: ....................................................................................................

II. பரீட்சைக் கட்டணம்:
பற்றுச்சீட்டு இல. : ....................................................................................................
கொடுப்பனவுத் திகதி: ....................................................................................................
கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி மற்றும் கிளை :

| பற்றுச்சீட்டை இங்கு முறையாக ஒட்டவும். |
|---|

15. பரீட்சார்த்தியின் சான்றிதழ்:

(அ) மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் சரியானவையும் என நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன் / வாக்குறுதியளிக்கின்றேன்.

(ஆ) விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட கூற்று பொய்யானதென அல்லது செம்மையற்றதெனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும், தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின், பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் என்றும் அறிந்துள்ளேன். மேலும், பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகளினால் நான் மேலும் பிணிக்கப்பட்டுள்ளேன் என்றும் பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

....................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி:...........................

15. I. கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகை:

இவ்விண்ணப்பத்தை அனுப்புகின்ற திரு./திருமதி/செல்வி........................... என்பவரை (முழுப்பெயர்) நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர்/அவள் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் 2023.... ஆம் ஆண்டு...... மாதம்...... ஆந் திகதியன்று இட்டார் என்றும் அவர் / அவள் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி இயைபான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

....................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர்:...........................
பதவி:........................................................
முகவரி:..............................................................
திகதி:.....................
(அலுவலகமுறையான முத்திரையை இங்கு இடவும்)

II. திணைக்களத் தலைவரின் சான்றிதழ்
மேலே விண்ணப்பதாரரால் கொடுத்துதவப்பட்ட விபரங்கள் என்னால் செவ்வை பார்க்கப்பட்டுள்ளனவென்றும் சொல்லப்பட்ட விபரங்கள் செம்மையானவையென்றும் அவரது செயல்நிறைவேற்றுகை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் உள்ளனவென்றும் சான்றுப்படுத்துகின்றேன். இவ்வலுவலர் தெரிவு செய்யப்படின், அவரது தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்பட முடியும் / விடுவிக்கப்பட முடியாது.

....................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பதவிப் பெயர்:................................
திகதி:...................................
(அலுவலகமுறையான முத்திரையை இடவும்)

04-126

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

*அட்டவணை - 2023*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 06.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2023 |
| | | புதன் | 12.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2023 |
| | | வெள்ளி | 21.04.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.04.2023 |
| | | வெள்ளி | 28.04.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2023 |
| **மே** | .. | வியாழன் | 04.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2023 |
| | | வெள்ளி | 12.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2023 |
| | | வெள்ளி | 19.05.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.05.2023 |
| | | வெள்ளி | 26.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2023 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2023 |
| | | வெள்ளி | 09.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2023 |
| | | வெள்ளி | 16.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2023 |
| | | வெள்ளி | 23.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2023 |
| | | வெள்ளி | 30.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.